**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.85/2021**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 20.02.2026 | | |
| பெயர்: | வெங்கடாஜலபதி (PW1– Cross.con ) | தகப்பனார் பெயர்: | நாராயணசாமி |
| கிராமம்: | புதுப்பட்டினம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | அஞ்சல்துறை(ஓய்வு) | வயது : | 62/2026 |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 20.02.2026**
**ஆரம்பித்த நேரம் – 12.08**

1.நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் என்பது 100/1 என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு மற்றும் தாவா சொத்து இரண்டும் சேர்ந்துதான் 97 செண்ட் என்றால் சரிதான். நான் குடியிருப்பது பாலாஜி நகர் மேட்டு தெரு. தாவா சொத்து இருப்பது வேறு இடம். அதனால் நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் ஆரம்பத்தில் தாவா சொத்தில் தான் கூறைவீடு கட்டிக்கொண்டு குடியிருந்து வந்தோம். பிறகு புயல், வெள்ளம் காரணமாக ஏற்பட்ட பாதிப்பால் தற்போது உள்ள மேட்டுத்தெருவுக்கு குடி மாறி விட்டோம். இந்த விவரத்தை எனது பிராதில் நான் கூறவில்லை என்றால் சரிதான்.

2. பிராது ஏ அட்டவணை சொத்தில் உள்ள நான்கெல்லையில் உள்ள மொத்த விஸ்தீரணம் 17 குழி என்றால் சரிதான். அதனால் ஏ அட்டவணை சொத்தின் மொத்த விஸ்தீரணம் 97 செண்ட் தவறு என்றால் சரிதான். ஆனால் ஆர்.டி.ஆர் உத்தரவுப்படி சொத்து விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2

ஆவணத்தில் பிரதிவாதி ஆக்கிரமித்ததாக சொல்லப்படும் பகுதி 10 குழி என்றால் சரிதான். எனது பிராதிலும் பாரா 6 ல் சுமார் 10 குழி என்று தான் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3.எனது பிராதில் ஆக்கிரமித்ததாக சொல்லப்படும் பகுதியான பி அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் 10 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் 10 குழி என்றுதான் வழக்கறிஞரிடம் சொன்னேன். எனது தந்தை பெயர் நாராயணசாமி, அவருடன் பிறந்தவர்கள் ரத்தினம் மற்றும் செல்லத்துரை. நான் மேட்டுத்தெருவில் குடியிருக்கும் வீடு மற்றும் அதையொட்டி அனுபவத்தில் உள்ள இடம் 80 ½ செண்ட் இருக்கும் என்றால் 3 ஏக்கர் 90 குழி இருக்கும். நான் மேட்டுத் தெருவில் குடியிருக்கும் 80 ½ செண்ட் போக மீதமுள்ள இடமானது 16 ½ செண்ட் தான் இருக்கும் என்றால் சரியல்ல. மேற்கண்ட 16 ½ நிலத்தை தான் எனது தகப்பனார் 17 குழியும் மற்றும் அவரது சகோதரர்கள் இருவரும் தலா 16 ½ குழியும் வாய்மொழியாக 1991–ம் வருடம் பிரித்துகொண்டார்கள் என்றால் தவறு.

4. எனது தகப்பனாரின் சகோதரர்கள் இருவரும் அவர்களுடைய பாகத்தை வேறு ஒருவரிடம் விற்று விட்டார்கள். எனது தகப்பனாருக்கு சொந்தமான இடத்தில் நான் தற்போது இருந்து வருகிறேன். எனது சித்தப்பா ரத்தினம் அவருக்கு 1991–ல் ஒதுக்கப்பட்ட இடத்தை இந்த பிரதிவாதிக்கு ரூ.1000/– க்கு 1996–ம் வருடம் விற்பனை செய்து விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது சித்தப்பா செல்லத்துரையின் வாரிசுகளிடம் அவருக்கு 1991–ல் ஒதுக்கப்பட்ட இடத்தை இந்த பிரதிவாதி ரூ.55,000/– க்கு 2017–ம் வருடம் கிரயம் செய்து விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ரத்தினத்திடம் வாங்கிய இடத்தில் தான் இந்த பிரதிவாதி மாடி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

5. பிரதிவாதி மாடி வீடு கிழக்கில் செல்லத்துரை வாரிசுகளிடம் வாங்கிய 16 ½ குழி அமைந்துள்ளது என்றாலும், அதை பிரதிவாதி அனுபவித்து வருகிறார்

என்றாலும் எனக்கு அதுபற்றி தெரியாது. அதனால் தான் தாவா ஏ அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் என்பது 17 செண்ட் என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்து 10 குழிதான் என்பதை உறுதிபடுத்த நான் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்யாமல் இருக்க காரணம் உண்டா என்றால் எனக்கு தனிப்பட்ட காரணம் ஏதும் கிடையாது.

6.எனது தாயார் சாரதாம்பாள் புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் பிரதிவாதி பன்னீர்செல்வத்திடம் 17 குழியை விற்பனை செய்து விட்டு ரூ.40,000/– வாங்கிகொண்டதாக கடந்த 19.02.2021–ல் புகார் கொடுத்தார் என்றால் பன்னீர்செல்வத்திடம் கடனாக வாங்கிய பணம் திரும்ப கொடுக்கப்பட்டது. தாவா ஏ அட்டவணை சொத்தின் மதிப்பு ரூ.35,000/– என்பதால் கூடுதலாக செலுத்திய ரூ.5000/– பணத்தினை வட்டியுடன் திரும்ப கொடுக்க வேண்டும் என்று பன்னீர்செல்வம் மற்றும் அவரது மனைவி கேட்டதால் அவர்கள் மீது புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் மேற்படி புகாரானது கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி புகாருக்கு மனு ரசீது எண் 50/21–ல் கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. ஏ அட்டவணை சொத்தின் 17 குழி விற்றுவிட்டதை மறைத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நாராயணசாமிக்கு நான் மட்டும் வாரிசல்ல, எனது தாயாரும் வாரிசு என்றாலும், அவரை இந்த வழக்கில் சேர்த்தால் அவர் உண்மையை கூறிவிடுவார் என்றால் காரணத்தால் அவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

7. நாராயணசாமியின் வாரிசுகளில் சாரதாம்பாளும் வருவார் என்பதால் அவரை வழக்கில் சேர்க்காத காரணத்தால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது பிராதில் தாவா ஏ அட்டவணை சொத்தை இந்த முறையில் நான் அனுபவித்து வந்தேன் என்று கூறவில்லை என்றால் சரிதான். தாவா ஏ அட்டவணை சொத்தில் புளியமரம் – 2, மாமரம் –2, ஒதிய மரம் –1, வாத நாராயண மரம் – 1, பூவரச மரம் – 1, வேம்பு மரம் –1 மற்றும் 13 பனைமரங்கள் உள்ளதை நான் சொத்து விவரத்தில் காட்டியுள்ளேனா என்றால்

இல்லை.

8. வா.சா.ஆ.2 ஆவணமான அறிவிப்பில் ஏ அட்டவணை சொத்து பற்றி குறிப்பிடபடவில்லை என்றால் ஆக்கிரமிக்கபட்ட பகுதி மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் பிராதுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் மேற்படி மரங்கள் இருப்பது பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்தான 10 குழியை எனது தாயார் பிரதிவாதியிடம் விற்பனை செய்து விட்டு, வசம் ஒப்படைத்து விட்டார் என்றாலும், மேற்படி சொத்திற்கு கூடுதல் பணம் பறிக்க வேண்டும் என்ற காரணத்தால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது தரப்பில் சாட்சியம் அளிக்க எனது சித்தப்பா ரத்தினம் மற்றும் செல்லத்துரை வாரிசுகள் நீதிமன்றத்திற்கு வருவார்களா என்றால் அவர்களுக்கும், எங்களுக்கும் பேச்சு வார்த்தை கிடையாது. 1991–ம் வருடம் எனது தகப்பனாருக்கு பாகப்பிரிவினையாக 17 குழி மட்டுமே கிடைத்தது என்றாலும், அதனை மறைக்கத்தான் சித்தப்பா ரத்தினம் மற்றும் செல்லத்துரை வாரிசுகள் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வரமாட்டார்கள் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

9. தாவா சொத்து எஸ்டேட்க்கு சொந்தமானது என்றால் சரிதான், அவர்களை இந்த வழக்கில் தரப்பினார்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்தை பொறுத்து பிரதிவாதி நல்லெண்ணத்தின் அடிப்படையில் தாயாரிடம் இருந்து பகுதி பெற்ற நபர் என்றால் சரியல்ல. அதனால் நான் அவரை ஆக்கிரமிப்பாளர் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. உண்மை சம்பவங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால், இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. மேற்கண்ட விவரத்தை கூறித்தான் வா.சா.ஆ.4 ஆனது கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்து 10 குழி தான் என்று உறுதிப்படுத்த வழக்கறிஞர் ஆணையர் நியமிக்காத காரணத்தால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

10. தாவா சொத்தை பொறுத்து எனக்கு மட்டுமே உரிமைமூலம் உள்ளது என்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளது சரியல்ல என்றால் சரியல்ல. அந்த காரணத்திற்காக வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**(முடிவு நேரம் 12.52)**

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது</u>.**

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**